பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 17 செவ்வாய்க்கிழமை [03-12-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 7

# ஐரோப்பிய நாடுகள் தீர்வுக்கு வலியுறுத்து

## ஸ்ரீலங்கா அரசுக்குக் கடிதம்

கொழும்பு, டிசம்பர் 3

நாட்டின் பிரச்சினைகளுக்கு உடனடியாக அரசியல் தீர்வு காண வேண்டிய தன் அவசியத்தை ஐரோப்பிய சமூகம் ஸ்ரீலங்கா அரசுக்கு வலியுறுத்தி இருக்கிறது.

கடந்த வாரம் இது தொடர்பான கடிதம் ஒன்றை ஐரோப்பிய சமூகம் ஸ்ரீலங்கா அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இத்தகவலை கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று வெளியிட்டிருக்கிறது.

மனித உரிமைகள் பேணப்படுவதை உத்தரவாதப்படுத்தினால் மட்டுமே, உதவி பெறும் நாடுகளுக்கு இனிமேல் உதவிகளை வழங்க முடியும் என ஐரோப்பிய சமூகம் முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

இதனையடுத்து —

மனித உரிமை மீறல் தொடர்பான குறைபாடுகளை நீக்குவதற்கு அரசு எடுத்திருப்பதாகக் கூறப்படும் நடவடிக்கைகளை விளக்குவதற்கு பல அரச அதிகாரிகள் அண்மைக் காலத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிரும்

[4ஆம் பக்கம் பார்க்க]

## கலைஞரை கைது செய்ய நாடாளுமன்றில் கோஷம்!

புதுடில்லி, டிச. 3

விடுதலைப் புலிகளுக்கும் தி. மு. கவுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் விவகாரம் குறித்து இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் நேற்றுப் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியைக் கைதுசெய்ய வேண்டும் என்று அரசாங்கக்கட்சி மற்றும் அ. இ. அ. தி. மு. கவின் எம். பிக்கள் சபையில் கோஷமிட்டனர்.

இந்தியா முழுவதிலும் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று தமிழக சட்டசபையின் எதிர்க் கட்சித் தலைவர் கே. பாலசுப்பிரமணியம் கேட்டிருக்கிறார்.

மாநிலங்கள் அவையில்—

இந்திரா காங்கிரஸ் எம். பிக்களும் தி. மு. க. மற்றும் அதன் தோழமைக் கட்சியின் எம். பிக்களும் காரசாரமான வாக்குவாதத்

[4ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



ஆமிக்காரர் அரசியல் பக்கம் திரும்புகினம் போல......!

### புலிகளின் பதில் கடிதம் குறித்து

## தமிழ்க் குழுக்களுடனும் தொண்டா பேசுவாராம்!

கொழும்பு, டிச. 3

''தமிழீழ விடுதலைப் புலிகள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் உள்ள விடயங்கள் குறித்து தக்க தருணத்தில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுடனும் நான் கலந்தாலோசிப்பேன்.''

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

புலிகளின் பதில் கடிதம் தொடர்பாக ஏற்கனவே ஜனாதிபதி திரு. பிரேமதாசா, சுதந்திரக் கட்சிப் பிரமுகரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு. அனுரா பண்டாரநாயக்கா, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தனா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப். எம். எச். எம். அஷ்ரப் ஆகியோருடன் தாம் நடத்திய பேச்சுக்கள் உற்சாகம் அளிப்பதாக அமைந்திருந்ததாகவும் திரு. தொண்டமான் தெரிவித்தார். [உ-இ]

## ஏழாலைப் பகுதியில் இரவில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், டிச. 3

ஏழாலை, குப்பிளான், குரும்பசிட்டிப் பகுதிகளில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் குடாநாட்டின் பல பகுதிகள் அதிர்ந்தன.

இரவு 8 மணியளவில் அவ்ரோ விமானம் ஏழாலை வடக்கு, மந்தி ஆகிய பகுதிகளில் நான்கு பீப்பாய்க் குண்டுகளை வீசியது. அதில் ஒன்று வெடிக்கவில்லை.

மீண்டும் நள்ளிரவு 12 மணியளவில் சகடை விமானம் ஒன்று ஆறு குண்டுகளை வீசியது. அதிலும் ஒரு குண்டு வெடிக்காமல் போனது.

இந்தக் குண்டு வீச்சினால் ஏழாலை கிராமசபை அலுவலகமும், சுமார் 25 வீடுகளும், தோட்டங்களும் சேதமடைந்ததாகத் தெரிய வந்தது.

ஏழாலையைச் சேர்ந்த பாஸ்கரன் [10 வயது] சேதீஸ்வரன் [9 வயது] ஆகிய இரு சிறுவர்களும் காயமடைந்தனர். [உ-3-15-68]

## வேர்விலிலும் குண்டு வீச்சு!

சாவகச்சேரி, டிச. 3

சாவகச்சேரி வேர்வில், முசிறி ஆகிய பகுதிகளிலும் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று 'பரா' வெளிச்சக்குண்டுகளின் உதவியுடன் தாக்குதல் நடத்தியது; இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. [உ-31]

## பொலிகண்டியிலும் நேற்று குண்டு வீச்சு!

பொலிகண்டிப் பகுதியிலும் நேற்றைய தினம் காலை 8. 30 மணியளவில் இரண்டு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

நான்கு குண்டுகள் வீசப்பட்டன. இதனால் மூன்று வீடுகள் சேதமடைந்தன.

சிரைத்தினம் மகேஸ்வரி [வயது 56] என்ற மாது படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த இந்த மாது மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பனங்கூடல் ஒன்றுக்கு வீசப்பட்ட குண்டினால் பல பனை மரங்கள் முறிந்தன. [உ-8-165-15]

### பிரபாவின் பிறந்த நாளன்று

## சென்னை விமானதளம் மூடப்பட்டிருந்தது!

சென்னை, டிச. 3

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரனின் பிறந்த தினமான கடந்த 26ஆம் திகதி சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தின் உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான சேவைப் பிரிவுகள் மூடப்பட்டிருந்தன.

அன்றைய தினம் விமான நிலையம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்பட்டதாக தனது சென்னைச் செய்தியாளரை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ-இ)

## லலித் குழுவின் வழக்கு; நீதிமன்றத் தீர்ப்பு இன்று

கொழும்பு, டிச. 3

ஐ. தே. கவிலிருந்து வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா உட்பட எட்டு எம். பிக்கள் தாக்கல் செய்த மனுவின்மீது உயர்நீதிமன்றம் இன்று காலை தீர்ப்பு வழங்கும்.

இந்த வழக்கில் லலித் குழுவினர் தோற்றால் அவர்கள் தமது எம். பி. பதவிகளை இழக்கவேண்டி வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## தனது அரசியல் நடவடிக்கையை அரசு தெளிவுபடுத்த வேண்டும்!

### கூட்டுப்படைத் தளகர்த்தர் ஹமில்டன் கோரிக்கை

கொழும்பு, டிச. 3

அரசு தனது அரசியல் நடவடிக்கைகள் பற்றி தெளிவாகத் தெரிவிக்குமானால், அது பயங்கரவாதத்தை ஒழிக்கும் இலக்கை இராணுவம் அடைவதை இலகுவாக்கும்.

இப்படிக் கூறினார் கூட்டுப் படைகளின் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க. கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

ஜெனரல் வனசிங்க மேலும் கூறியதாவது:—

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள உத்தேச பேச்சுவார்த்தைக்கு நான் எதிர்ப்பு அல்ல.

கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள நிலை அங்கு மாகாணசபைத் தேர்தலை நடத்த உகந்ததாக உள்ளது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைப்பார்களானால் வடபகுதியிலும் மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியும்.

படையினர் ஏராளம் தேவை

ஆயுதபடையில் போதிய ஆட்கள் இல்லாததன் காரணமாக யாழ்ப்பாணப் பட்டினத்தினுள் இராணுவம் நுழைய முடியாதுள்ளது; அப்படியான ஒரு நடவடிக்கைக்கு ஏராளமான படையினர் தேவை; எனினும் கிழக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உதவி வழங்குவதை 6 நாடுகள் நிறுத்தின!

### லலித் வெளியிட்ட தகவல்

கொழும்பு, டிச. 3

குறைந்தது ஆறு மேற்கு நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்குவதை நிறுத்தி விட்டன என்று முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார்.

''புரொண்ட்லைன்'' சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் அத்துலத்முதலி இத்தகவலை வெளியிட்டார்.

நோர்வே, சுவீடன், பின்லாந்து, டென்மார்க், ஹொலந்து மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் பல்வேறு காரணங்களுக்காக உதவிகளை நிறுத்தி விட்டன என்றும் —

கனடாவும், அமெரிக்காவும் மிகக் குறைந்தளவு உதவிகளையே இப்போது வழங்கி வருகின்றன என்றும் —

பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் பற்றி ஜப்பானும் பேச ஆரம்பித்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

## தீர்வு காணும் முயற்சியிலும் ராணுவம் ஈடுபட வேண்டும்

### மல்வத்தை பீடாதிபதி வேண்டுகோள்

கொழும்பு, டிச. 3

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து பயங்கரவாதத்தை அழிக்கும் அதே நேரத்தில், தமிழ் மக்களின் பிரச்சினையைப் புரிந்துகொண்டு உகந்த தீர்வுகளைக் காணும் முயற்சிகளில் உயர் இராணுவ அதிகாரிகள் ஈடுபட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மல்வத்தை பீடாதிபதி வண. ரம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்ஸி மகாநாயக்க தேரர் தம்மைச் சந்தித்த கூட்டுப் படைகளின் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிடம் இந்த வேண்டுகோளை விடுத்தார். (உ-எ)

## மண்டைதீவு ஷெல்கள் மட்டுவிலிலும் வீழ்ந்தன!

சாவகச்சேரி, டிச. 3

மண்டைதீவுப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் இரவு 7 மணி முதல் 8 மணி வரை ஏவப்பட்ட ஷெல்கள் சாவகச்சேரி மற்றும் மட்டுவில் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

மட்டுவில் மகாவித்தியாலயத்தில் [illegible] மண்டபம் ஆகியன பெரும் சேதமடைந்தன. பல மரங்களும் முறிந்து வீழ்ந்தன.

மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த சுமார் இருநூறுக்கும் அதிகமானோர் மயிரிழையில் உயிர்தப்பினர்.

வித்தியாலயத்தில் இருந்து 200 யார் தூரத்தில் உள்ள ஒரு வீட்டுக்கு அருகே விழுந்த [illegible]

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஜே. ஆரின் ஆட்களே லலித்தின் கட்சியில்!

கொழும்பு, டிச. 3

ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர் குழுவினரால் ஆரம்பிக்கப்படும் ''ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி'' என்ற புதிய அரசியல் கட்சியின் உயர் பதவிகளுக்கு, முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா தலைமையிலான அரசில் முக்கிய இடங்களை வகித்தவர்களே நியமிக்கப்பட்டிருப்பதாக 'அத்த' பத்திரிகை

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஓடு, மரம், சீற், கதவுப் பலகைகள், மேசை, கதிரை, விறாக்கிகள், சோக்கேஸ், அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். [18904]

### ஆரம்ப ஆசிரியர் விண்ணப்பப்படிவம்

ஆரம்ப ஆசிரியர் விண்ணப்பப் படிவம் 3 - 12 - 1991 முதல் விற்பனைக்கு வரும். உயர்ந்த ரக தாளில் விளம்பர நிபந்தனைகளுக்கேற்ப அச்சிடப்பட்டது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. நிபந்தனைகளையும் ஏனைய விவரங்களையும் பார்வையிடலாம்: இ. சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (கி-1018)

### விற்பனைக்கு

தண்ணீர்தாங்கி (பைபர்) 2000 லீற்றர் கொள்ளக் கூடியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். [18905]

## நொதோண் கல்வி நிலையம்

சுண்டிக்குளி.

## A/L 92

பொருளியல்— திரு. கலாகரன்

கணக்கியல் — திரு. பிரபாகரன்

வர்த்தகம் — திரு. ரகுநாதன்

கிறீஸ்தவம் — திரு. அமல்

நடைபெறுகின்றன.

(18912)

## நகரசபை - வவுனியா அறிவித்தல்

வவுனியா நகர பஸ் நிலையக் கடைத் தொகுதியில் உள்ள கடைகளைக் கேள்விக் கோரி எடுத்து இதுவரை அக் கடைகளைத் திறந்து வைத்து வியாபாரம் செய்யாதிருப்பதுடன் மூன்று மாதங்களுக்கு மேல் வாடகை நிலுவைகளைச் செலுத்தாது இருப்பவர்களுக்கு இவ் விளம்பரத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வாடகை நிலுவைகளைச் செலுத்துவதுடன், கடைகளைத் திறந்து வியாபாரம் செய்யும்படியும் இத்தால் அறிவித்தல் கட்டளை தரப்படுகின்றது.


இக் கால எல்லைக்குள் திறந்து வியாபாரம் செய்யாது மூடப்பட்டிருக்கும் கடைகள் யாவும் அவசர காலச் சட்டவிதிகளின் கீழும், ஒப்பந்தத்தின் சரத்துக்களின் பிரகாரமும் வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு, இக் கடைகள் திறக்கப்பட்டு மீண்டும் கேள்விகள் கோரப்பட்டு வாடகைக்கு விடுவதற்கு இச் சபையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மன வருத்தத்துடன் அறியத் தருகின்றேன்.

எனவே இக் கால எல்லைக்குள் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்து, இச் சபையின் நிர்வாகத்துடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இராஜா தணிகாசலம்,
செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா. 1991-11-25. [சி-0964]

## 45ஆம் நாள் நினைவஞ்சலி





**இ. ஹரிஹரன்**

பூலோக விஜயம்: 08 - 07 - 1948

வானுலக அழைப்பு: 20 - 10 - 1991

**ஹ. ஆரணி**

பூலோக விஜயம்: 04 - 06 - 1988

வானுலக அழைப்பு: 20 - 10 - 1991

கண்ணிமைக்கும் நேரமதில் - காலன்
உயிர் கவர்ந்ததற்கு காலமேதான்
பதில் சொல்லும்; தினம் கண்ணீரில் நனைகின்றோம்.

குடும்பத்தினர்.

இரட்டை வாசல்,
மாகியம்பிட்டி,
சண்டிலிப்பாய். (18897)

## பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கொழும்பு, டிச. 3

1991 / 92 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

நான்கு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், நான்காவது பாடத்தில் இருபத்தைந்திற்கும் கூடுதலான புள்ளிகளையும், கட்டு மொத்தமாக 150 இற்கு கூடுதலான புள்ளிகளையும் பெற்றிருந்தால் அவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் இம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நன்றி நவிலல்

### அமரர் கறுவல்தம்பி கந்தசாமி

24 - 11 - 1991 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கறுவல்தம்பி கந்தசாமி அவர்களின் மரணச் சடங்கின்போது கலந்து கொண்டு சகல உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கியவர்களுக்கும், ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- குடும்பத்தினர்.

52/6, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். [18910]

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

### சபாபதிப்பிள்ளை நாகராஜா

தோற்றம்: 28 - 09 - 1929

மறைவு: 14 - 12 - 1990


திதி: 03 - 12 - 1991

அன்புச் சிறகால் அரவணைத்து எங்களையே
துன்பச் சுமையினின்றும் தூக்கிச் சுமைவிலக்கி
இன்பச் சுவையினிலே நீராட்டி வளர்த்தெடுத்த
அன்பின் திருவுருவே இன்னொருகால் வருவீரோ?

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

பொற்பதி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [18881]

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



ஆனந்தக் கண்ணீரில் 10 — 10 — 1972

அசுரத் தண்ணீரில் 07 — 09 — 1991

### செல்வன் தி. இராகுலன்

(யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன்)
(91 ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு)

காலி முகத்திடலில் குளித்திடும் வேளை—பொங்கிடும்
கடலலைகள் மத்தியில் குதித்திடும் வேளை—கலனின்
தாது சொல்லிடும் கடலலை ஒன்று வந்ததடா—ராகுலா
உன்னைக் கடல் பலி கொண்டதடா:
பள்ளிப் பருவம் முடியுமுன்னரே—நீ
பள்ளிகொண்டு விட்டதேனோ?
கடலலைகள் ஓயும்வரை—எம்
நினைவலைகள் ஓயாதடா:

நீ எம்மை விட்டுப் பிரிந்த இந்த 90 ஆம் நாளில் உன்னை நினைவு கூர்ந்து உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

அன்பு நண்பர்கள்
[illegible] இரி,

(18813)

## 6 ஆம் திகதி விடுமுறை

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ் மாவட்டப் பாடசாலைகள் மூன்றாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் ஆறாம் திகதி மூடப்படவிருக்கின்றன.

ஜனவரி 2 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும். (ஓ-3)

# மரண அறிவித்தல்கள்

## முத்து சின்னப்பு (தம்பு)

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகக்கொண்ட முத்து சின்னப்பு 02-12-1991இல் காலமானார். இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் சின்னம்மாவின் அன்புக் கணவரும், பாலகிருநாதன், பரமநாதன், ஜயநாதன், திருமதி இராசையா ஈஸ்வரி, விக்னேஸ்வரன், மகேஸ்வரன், திருமதி சிவனேசன் தனேஸ்வரி, காலஞ்சென்ற சாந்தி, இராசேந்திரன், புஸ்பராசா, வரதராசா, ஜெயந்தி, திருமதி உதயகுமார், வசந்தி, சந்திரமோகன், முகுந்தன், சுமதி, ஆகியோரின் அன்புத் தந்தையும் வார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 03-12-1991 காலை 10 மணி அளவில் 143/1, ஸ்ரான்லி வீதி, அத்தியடி இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எம். எஸ். இராசேந்திரன்,
(வைரம்)
கடைச்சல் தொழிற்சாலை.

143/1, ஸ்ரான்லி வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். [18913]

## திருமதி பொன்னம்மா சுந்தரம்

வேலணை கிழக்கைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா சுந்தரம் அவர்கள் 01 - 12 - 1991 அன்று காலை 6 30 மணியளவில் காலமானார்.

அன்னார் திரு. நா. சுந்தரம் அவர்களின் அன்பு மனைவியாரும், திரு. க. சுந்தரேசன் (உள்ளூராட்சி சேவை, முல்லைத்தீவு) டாக்டர் சு. சுந்தரேஸ்வரன் (பல்வைத்திய தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலை) - (மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி கலாநிதி சுந்தரேசன் (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி வசந்தா சுந்தரேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வன் விமிசாந் அவர்களின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கே. கே. எஸ். வீதி சுன்னாகத்தில் 01 - 12 - 1991 (ஞாயிற்றுக் கிழமை) மாலை 5 மணிக்கு நடைபெற்று, சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
டாக்டர் சு. சுந்தரேஸ்வரன்

கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம். [18915]

## சின்னப்பு தம்பித்துரை

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி சி. தம்பித்துரை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னப்பு—அப்பினி பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கைலாசம் (பொறியியலாளர்), ஆச்சிக்குட்டி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மாருதப்புரவீகவல்லியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற Dr சிவஞானம், சுந்தரம் (பொறியியலாளர்), கனகம்மா, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கே. இரத்தினசிங்கத்தின் (அதிபர், விவேகானந்தா வித்தியாலயம், அனுராதபுரம்) அன்பு மைத்துனரும், சிவஞானவல்லி (யூ. எஸ். ஏ.), சிவகாமசுந்தரி, ஆனந்தகுமாரசாமி (பொறியியலாளர், யூ. கே.), மனோசுந்தரி (அதிபர், முத்துத்தம்பி ம. வி., திருநெல்வேலி) Dr கிருஷ்ணானந்தன் (சென்றல் நேர்ஸிங் ஹோம், திருநெல்வேலி) முத்துக்குமாரசாமி (L. L. M., கனடா), பார்வதிதேவி (கனடா), சிவரூபவதி (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத் தந்தையும், குலேந்திரன் (யூ. எஸ். ஏ.) எஸ். சண்முகராசா (கே. ஏ. எஞ்ஜினியேர்ஸ், பலாலி றோட், திருநெல்வேலி), சிவயோகேஸ்வரி (யூ. கே.), த. சிதம்பரநாதன் (விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி, கச்சேரி, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற வீ. ஜெயராஜசிங்கம் (பொறியியலாளர்) எஸ். தர்மலிங்கம் (கணக்காளர், கனடா), சுரேந்திரன் (நீதிபதி, இளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க் கிழமை திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 00 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
மு. சி. சண்முகராசா
(மருமகன்)

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி [18916]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தொடரும் துரோகத்தனம்

ராஜீவ்காந்தி கொலையை அடுத்து தமிழ்நாட்டில் ஜெயலலிதா அரசினால் ஆரம்பிக்கப்பட்ட புலிகள் எதிர்ப்புப் போராட்டம் பல்வேறு கட்டங்களையும் தாண்டி தற்போது தமிழ்நாட்டு அரசியலைத் தொட்டு நிற்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ்நாட்டில் தடை செய்யப்படாத ஓர் இயக்கமாக உள்ள போதிலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளையும், அவர்களது ஆதரவாளர்களையும், அவர்களுடன் சம்பந்தப்படுத்தி அரசியல்வாதிகளையும் கைது செய்வதில் ஜெயலலிதா அரசு முழு மூச்சாக ஈடுபட்டு வருகிறது.

அதாவது விடுதலைப் புலிகளை மட்டும் அல்ல தமது அரசியல் எதிரிகளான தி.மு.க வினரையும் ஒழித்துக் கட்டுவதே தமிழ்நாட்டு ஆட்சியாளர்களின் நோக்கம் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

ஏற்கனவே தி.மு.கழக எம்.பியான வை.கோபாலசாமியின் சகோதரர் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு உதவிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். கடைசியாக முன்னாள் உள்துறை செயலாளர் நாகராஜன் கைது செய்யப்பட்டு அவரிடம் இருந்து ஒப்புதல் வாக்கு மூலமும் பெறப்பட்டுள்ளது.

தமது நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள புலிகளின் களத்தை முற்றாக அழித்து ஸ்ரீலங்காவில் நடைபெறும் போரில் புலிகளைத் தோல்வி அடையச் செய்துவிட முடியும் என்று ஜெயலலிதா கருதுகிறார் போலும்.

தற்போதைய போரிலே தமிழீழ மக்களைக் கை தூக்கி விட வேண்டியது தமிழ்நாடு அரசின் பொறுப்பு ஆகும். ஆனால் இதற்கு மாறாக ஸ்ரீலங்கா அரசின் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு துணைபோவது வரலாற்றிலேயே மாபெரும் துரோகம்.

தமிழ்நாட்டில் தற்போது நடக்கும் புலிகள் எதிர்ப்பு — தி.மு.க. எதிர்ப்புப் போராட்டத்தில் புலிகள் தொடர்ந்து ஒரு சவாலாக இருந்து அவற்றை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் தி.மு.க வின் நிலை இதற்கு மாறாகவே இருக்கிறது.

மக்களின் ஆதரவைத் திரட்டி ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளை எதிர்கொள்வதை விடுத்து புலிகள் ஆதரவாளர் என கோபாலசாமி எம்.பி போன்றவர்களுக்கு வாய்ப்பூட்டுப் போடுவதும் குற்றச்சாட்டுக்களில் இருந்து நழுவ முயல்வதும் வெட்கக்கேடானது ஆகும். அரசியல் வங்குரோத்துத் தனத்தையே இது காட்டுகிறது.

ஆனால் இத்தனைக்கும் மத்தியில் தமிழ்நாட்டில் தமிழருக்கு சுயநிர்ணய உரிமை கோருவோரின் குரல் தற்போதும் ஒலித்துக்கொண்டிருப்பதையும், இதன் பின்னணியில் கல்விமான்களும், அறிஞர்களும் இருப்பதையும் மறந்துவிட முடியாது.

ஈழத்தில் ஏற்பட்டது போன்று அடக்குமுறை தொடருமானால் ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாதது ஆகி தமிழ்நாடும் ஒரு பஞ்சாப்பாக மாறும் நிலை தோன்றலாம்.

காலப்போக்கில் இந்தி பேசும் மாநிலங்கள் தவிர்ந்த ஏனைய இன ரீதியான மாநிலங்களை இழந்துவிடும் நிலை மத்திய அரசுக்கு ஏற்படலாம். ஒன்றிணைக்கப்பட்டிருந்த இன ரீதியான சோவியத் குடியரசுகள் பிரிந்து சென்றது இந்தியாவுக்கு ஒரு படிப்பினையாகட்டும்.

காங்கேசனில் பொருள்களை இறக்க

## 150 தொழிலாளரை தருமாறு செயலகத்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 3

காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்க 150 தொழிலாளர்களை ஏற்பாடு செய்து தருமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ் செயலகத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

காங்கேசன் துறைமுகத்தில் தற்சமயம் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலை மந்தமாக நடைபெற்று வருவதாகவும்—

அதனை விரைவுபடுத்தும் நோக்குடனேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக்கோரிக்கையை ஏற்று தொழிலாளர்களை அனுப்பினால், அவர்களின் முழுப் பாதுகாப்பையும் செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று செயலகம் தெரிவித்துள்ளது. (உ-3)

## ஷெல்லுக்கு பயந்து ஓடியவர் கிணற்றுள் விழுந்து மரணம்

நேற்று முன்தினம் இரவு மண்டைதீவுப் பகுதியிலிருந்து சாவகச்சேரியை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களின் போது ஷெல்லுக்குப் பயந்து ஓடியபோது வயோதிபர் ஒருவர் தவறி கிணற்றில் விழுந்து மரணமானார்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த செல்வம் (70 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## பேராதனை வெளிவாரிப் பரீட்சை

பேராதனைப் பல்கலைக் கழக 91 ஆம் ஆண்டுக்கான வெளிவாரிப் பரீட்சைகள் இம்மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

இந்தப் பரீட்சைகள் கொழும்பு, களுத்துறை, பேராதனை ஆகிய இடங்களில் நடைபெறும்.

பொது கலைமாணிப் பரீட்சை 14 ஆம் திகதியும் விசேட கலைமாணிப் பரீட்சையும் பொது விஞ்ஞானமாணிப் பரீட்சையும் 22 ஆம் திகதியும் நடைபெறவிருக்கின்றன. (இ-3)

## 40 பேர் நேற்று விடுதலையாகினர்

யாழ்ப்பாணம், டிசம்பர் 3

விடுதலைப் புலிகளால் பல்வேறு காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 40 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கோண்டாவிலில் உள்ள மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்ற விடுவிப்பு நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களான திரு. செந்தாளன், திரு. விவேகி, திரு. பரா, திரு. வாஞ்சிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுவிக்கப்பட்டவர்களின் உறவினர்களும் நூற்றுக்கணக்கில் அங்கு வந்திருந்தனர் [உ-5]

## புதிய தொழிற்சங்கம் லலித் குழு தொடங்கியது

கொழும்பு, டிசம்பர் 3

ஐ.தே.கவின் அதிருப்தியாளர் அணியைச் சேர்ந்த லலித் — காமினி குழுவினர் "ஜனநாயக ஐக்கிய தேசிய தொழிலாளர் சங்கம்" என்ற தொழிற்சங்க அமைப்பைத் தொடங்கியுள்ளனர். இச்சங்கம் கடந்த வாரம் பதிவுசெய்யப்பட்டது.

ஜே.ஆர். அமைச்சரவையில் கபினட் அமைச்சராகவிருந்த எச்.பி. அபேரத்ன இத்தொழிற்சங்கத்தின் தலைவராகவும் முன்னாள் அமைச்சுச் செயலாளர் சரத்பெரேரா சங்கத்தின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர் (உ-10)

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

கொழும்பு, டிசம்பர் 3

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஆளும் ஐ.தே.கவின் மாநாட்டை அடுத்து, அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள் இடம்பெறும் என அரசின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார், 'திவயின' சிங்களப் பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

லலித் குழுவினர் பிரிந்து சென்றதால் அமைச்சரவையில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றும்—

பல அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட அமைச்சரவை அந்தஸ்து மாற்றப்படும் என்றும்—

ஆளும் கட்சியின் [illegible] அமைச்சரவையில் இடமளிக்கப்படும் என்றும் [illegible]

# பூரண சுயாட்சியையே புலிகள் கேட்கிறார்கள்

## தொண்டமானின் பேட்டி இது

கொழும்பு, டிச. 3

எனது யோசனைகள் பூரணத்துவமானவை அல்ல என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்: பூரணமான சுயாட்சியையே விடுதலைப் புலிகள் கோருகின்றனர்

—இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் தொண்டமான்.

''புரொண்ட்லைன்'' (டிச. 6) சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். அந்தப் பேட்டியின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

கேள்வி: உங்களுக்கு அனுப்பிய பதிலில் விடுதலைப் புலிகள் விடுத்துள்ள கோரிக்கையின் அடிப்படை என்ன?

பதில்: வடக்கு - கிழக்கு மக்கள் தங்கள் விவகாரங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளக்கூடிய பூரண சுயாட்சியையே விடுதலைப் புலிகள் இயக்கம் கோருகிறது.

இ.தொ.காவின் அபிப்பிராயத்திற்கிணங்க நான் சில யோசனைகளை முன்வைத்துள்ளேன். அவை முன்னேற்றமான, சாதகமான ஒன்று என்று விடுதலைப் புலிகள் ஏற்றுள்ளனர். அதேவேளை, அந்த யோசனைகள் பூரணத்துவமானவையல்ல என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஆகவே நான் தெரிவித்த யோசனைகளிற்கு இணங்க. அவர்களின் அபிலாசைகளை திருப்திப்படுத்தக் கூடியதாக நாம் ஏதாவது வழங்க வேண்டும்.

கேள்வி: உங்கள் எண்ணம் என்ன?

பதில்: நீங்கள் பொறுத்திருக்க வேண்டும். ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்து, அவரது கட்சியின் யோசனைகளைக் கேட்டேன். அவர் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார். அவர் தனது ஆட்களுடன் ஆலோசனை நடத்துகிறார்.

கேள்வி: பேச்சுகளுக்கு விடுதலைப் புலிகள் ஏதும் நிபந்தனை விதித்துள்ளனரா?

பதில்: நிபந்தனைகள் எதனையும் விடுதலைப் புலிகள் விதிக்கவில்லை.

கேள்வி: பேச்சுக்கு கால வரையறை ஏதும் உங்கள் மனதில் உண்டா?

பதில்: மெதுவாகச் செல்வோம். கட்டம் கட்டமாக, திட்டவட்டமான முறையில் நாம் இயங்குவோம்.

கேள்வி: யுத்த நிறுத்தம் வரும் என்று நம்புகிறீர்களா?

பதில்: நான் என்றுமே நம்பிக்கையிழந்தவனல்லன்.

கேள்வி: எந்தவித சுயாட்சி வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கூறியுள்ளார்களா? இந்திய மாநிலங்களுக்கு இருப்பது போன்ற......?

பதில்: நீங்கள் இந்தியர்கள். இந்தியா தான் சிறந்த உதாரணம் என்று எண்ணுகிறீர்கள். இது தான் நீங்கள் விடும் பிழை. கனடா, சுவிஸ் நாடுகளில் உள்ள சுயாட்சி முறையை நீங்கள் உதாரணமாகக் கொள்ளலாம். நீங்கள் தான் சுயாட்சி வைத்துள்ளீர்கள் என்று வானத்தில் மிதக்காதீர்கள். உங்கள் சுயாட்சி சிறந்ததானால் பஞ்சாபில் நீங்கள் ஏன் அல்லல்படுகிறீர்கள்? (அ-எ)

# பூநகரியில் 50 பேர் படையினரிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம், டிச. 3

பூநகரி, செட்டியகுறிச்சியைச் சேர்ந்த சுமார் 50 பேர் இராணுவத்திடம் சிக்கியுள்ளனர்.

ஞானிமடத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கடந்த வியாழக்கிழமை செட்டியகுறிச்சி, கறுக்காய்த்தீவு ஆகிய பகுதிகளை முற்றுகையிட்டனர். கடந்த மாதத்தில் நடந்த பூநகரி இராணுவ நடவடிக்கையின் போது அங்கிருந்து இடம்பெயராமல் தங்கியிருந்தவர்கள் அச்சமயம் படையினரிடம் சிக்கிக் கொண்டனர்.

கறுக்காய்த்தீவு எல்லையில் வயல் வெளியில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் ஒருவாறு செல்லையாதீவைச் சென்றடைந்தனர். அங்குள்ள அம்மன் கோவிலில் இன்னும் பலர் தங்கியுள்ளனர்.

இத்தகவல்களை, நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய கறுக்காய்த்தீவைச் சேர்ந்த பொன்னுச்சாமி திருநாவுக்கரசு (64 வயது) உதயனுக்குத் தெரிவித்தார். அவர் இப்போது கொக்குவில் மேற்கில் தங்கியுள்ளார்.

நாம் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது திடீரென அங்கு வட்டமாக வந்து சேர்ந்த இராணுவத்தினர் கிராமத்துக்குள்ளே போகக் கூடாது என்றும் உத்தரவிட்டனர். உடனடியாக வெளியே போகாவிட்டால் சுட்டுப்போடுவதாகவும் பயமுறுத்தினர்—

"நாம் உடுத்த உடுப்புடனேயே செல்லையாதீவுக்குப் போய் அன்று இரவு அம்மன் கோவிலில் தங்கினோம். நான் அங்கிருந்து பரந்தனுக்குச் சென்று ஒருவாறு இங்கு வந்து சேர்ந்தேன். இன்னும் பலர் செல்லையாதீவு அம்மன் கோவிலிலேயே தங்கியுள்ளனர் —

"செட்டியகுறிச்சி, கறுக்காய் தீவு, ஞானிமடம் ஆகிய பகுதிகளில் பல வீடுகளை இராணுவத்தினர் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர்" — என்று அவர் தெரிவித்தார். (அ-15)

## இந்திய விமானத்தில் குண்டு:

# காஷ்மீர் தீவிரவாதிகள் உரிமை கோரியுள்ளனர்

புதுடில்லி, டிச. 3

லண்டன் புறப்படவிருந்த எயர் இந்திய விமானத்துக்கு குண்டு வைத்ததற்கான பொறுப்பை ஜம்மு காஷ்மீரின் தீவிரவாதிகள் குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

குண்டை தாங்களது குழு விமானத்தில் வைத்ததாக 'முஸ்லிம் ஜாம்பவாஸ்' என்று அழைக்கப்படும் இந்தக் குழு ஸ்ரீநகரில் பி.பி.ஸி. செய்தியாளரிடம் நேற்று தொலைபேசி மூலம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் புது டில்லியிலிருந்து லண்டன் புறப்பட இருந்த எயர் இந்திய விமானத்தில் குண்டு வைக்கப்பட்டிருந்தமை தக்க சமயத்தில் கண்டுபிடிக்கப்பட்டதும், அந்த விமானத்தில் நானூறுக்கு அதிகமான பயணிகள் இருந்தனர் என்பதும் தெரிந்ததே.

இந்தச் சம்பவம் தொடர்பாக விமான சிப்பந்தியான பல்விந்தர்சிங் என்ற சீக்கியர் கைது செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-த-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தச்சன்காட்டில் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிசம்பர். 3

நேற்று அதிகாலை 1-30 மணி முதல் 4 மணிவரை மாவிட்டபுரம் தச்சன்காட்டுப் பகுதியில் துப்பாக்கிச் சூடும் ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன.

சில ஷெல்கள் தெல்லிப்பளை கொல்லங்கலட்டியில் விழுந்து வெடித்தன.

(உ-68)

## 1,000 ரூபா கள்ள நோட்டு கவனம்!

கொழும்பு, டிச. 3

நாடு முழுவதிலும் ஆயிரம் ரூபா கள்ள நோட்டுகள் பெருமளவு உலவுவதாக இரகசியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

A/11 என்ற வரிசையிலுள்ள ஆயிரம் ரூபா நோட்டுக்களைக் கவனமாகப் பரிசீலித்து வாங்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

[உ-10

## தனது அரசிய...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாகாணத்தில் படையினர் தங்கள் நிலைகளை ஸ்திரப்படுத்தி உள்ளனர்.

சிப்பாய்களின் மனோதிடம் இன்று அதிகரித்துள்ளது. விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்கும் தந்திரோபாயங்களை ஒத்ததாக எமது படையினரும் போரிடுகின்றனர்—என்றார்.

[உ-எ]

## ஐரோப்பிய..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் இடம்பெறுவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உதவும் நாடுகள் தெரிவித்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தலைமையில் குழு ஒன்றை கொழும்பு அரசு ஏற்கெனவே நியமித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே—

ஸ்ரீலங்காவுக்கு உதவும் நாடுகளின் அடுத்த கூட்டம் 1992 பெப்ரவரியில் பாரிஸ் நகரில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## மண்டைதீவு..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சேதமடைந்தது. வீட்டில் இருந்தோர் பதுங்கு குழியில் தஞ்சம் புகுந்ததால் தப்பிக்கொண்டனர்.

அன்றிரவு சாவகச்சேரிப் பக்கமாக ஏவப்பட்ட ஒன்பது ஷெல்களில் நான்கு மட்டுவில் பகுதியில் விழுந்தது குறிப்பிடத்தக்கது.

ஏனையவை சாவகச்சேரிப் பகுதியில் விழுந்தன. தபால் நிலையப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் தபால் நிலையமும் சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-31]

## நாகராஜனின் வாக்குமூலம் சோடிக்கப்பட்ட ஒன்று!

### கருணாநிதி குற்றச்சாட்டு

முன்னாள் உளவுத்துறை செயலாளர் ஆர். நாகராஜன் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலம் பொலிஸாரினால் தயாரிக்கப்பட்டது என்று முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி குற்றஞ் சாட்டியுள்ளார்.

சென்னையில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இக்குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

"திரு. நாகராஜனின் வாக்கு மூலத்தின் பிரதியில் பொலீஸார் திருத்தம் செய்திருக்கிறார்கள்.

"ஒப்புதல் வாக்குமூலம் அரசாங்கத்தினால் சோடிக்கப்பட்டது.

"அந்த வாக்குமூலம் உண்மையாகவே நாகராஜனால் எழுதப்பட்டதானா என்பதைக் கையெழுத்து நிபுணர்களைக் கொண்டு பரிசோதனை செய்யவேண்டும்.

"அ. தி. மு. க. அரசாங்கம் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறது.

—என்று அவர் தெரிவித்துள்ளார். [க-எ]

## பல்கலைக்கழக...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் 12 ஆம் திகதி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 31 ஆம் திகதி ஆகும். (ந)

## ஜே. ஆரின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்தி வெளியிட்டுள்ளது.

கட்சித் தலைவராக திரு. ஏ. வி. குணரத்தினா இயூவி. நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் பொதுச் செயலாளராக திரு. தம்பிறி பொன்சேகாவும் பொருளாளராக திரு. ராஹல் குணரத்தினாவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல்லின் மனைவி திருமதி மலிகா டி மெல் புதிய கட்சியின் உபதலைவர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கட்சியின் உயர்பதவிகள் வகிப்பவர்களில் ஒருவர் முன்னாள் சபாநாயகர் என்றும் கூறப்படுகிறது.

கட்சியைப் பதிவு செய்யக் கோரும் விண்ணப்பம் கடந்த வியாழன் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. [உ-எ]

## கலைஞரை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஈடுபட்டனர்.

மாநிலங்கள் அவையின் நடுப்பகுதிக்கு இரு தரப்பினரும் சென்று கோஷங்கள் எழுப்பினர். அதனைத் தொடர்ந்து சபையை 15 நிமிடங்களுக்கு அவைத் தலைவர் ஒத்தி வைத்தார்.

இதேவேளை மக்கள் அவையில்—

இப்பிரச்சினை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி பேசுகையில், இந்தியாவில் விடுதலைப்புலிகளின் அனைத்து நடவடிக்கைகளையும் ஆராய உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் நீதி விசாரணை ஒன்றை நடத்த அரசு முன்வரவேண்டும் என்று கோரினார். (க-எ)


## கொக்குவில் இந்துக் கல்லூரி

### ஆண்டு 6 அனுமதி-1992

### அனுமதிப் பரீட்சை

1. தற்போது ஆண்டு 5 இல் கல்வி கற்கும் மாணவர்களும், 1-2-1981 திகதிக்குப் பின்னர் பிறந்தவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர்.
2. அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரிப் பணிமனையில் 45 ரூபா செலுத்தி 4-12-91 முதல் நேரில் பெறலாம்.
3. பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 18-12-91 இற்கு (புதன்) முன்னர் பணிமனையில் கொடுக்க வேண்டும்.
4. பரீட்சை 30-12-91 முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும்.

அதிபர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

2-11-91

(இ/0965)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலய அதிபர்
திருமதி க. சிதம்பரநாதன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### திரு. சி. தம்பித்துரை

[இளைப்பாறிய மாவட்ட நீதிபதி]

அவர்களின் பிரிவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/முத்துத்தம்பி மகாவித்தியாலய
ஆசிரியர்கள், மாணவர்கள்.
திருநெல்வேலி.

(18918)

## மரண அறிவித்தல்

### நாகமணி வேலுப்பிள்ளை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கரம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் மாநகரசபை சாரதி திரு. நாகமணி வேலுப்பிள்ளை [அம்மான்] காலமானார். அன்னார் சௌந்தரத்தின் அன்புக் கணவரும், வரதராசா (இந்தியா), பாஸ்கரன் [ஜேர்மனி], சர்வானந்தன், தர்மவதனி, தர்மதேவகி, தர்மசீலி ஆகியோரின் அன்புத் தந்தையும், ந. கனகரத்தினம் [வர்த்தகர்], க. நாகேந்திரம் [கிசுமடு] ஆகியோரின் அன்பு மாமனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 3-12-91 செவ்வாய் காலை பத்து மணிக்கு செட்டித்தெரு 31/2 இலக்க இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

31/2 செட்டித்தெரு,
நல்லூர்.

தகவல்:
வே. சௌந்தரம்
(மனைவி)

[18917]


# யாழ். றோட்டரிக் கழகத்தின்

# தொழிற் பயிற்சித் திட்டம்

யாழ். றோட்டரிக் கழகத்தினால் நடத்தப்படவிருக்கும் விசேட தொழிற் பயிற்சித் திட்டத்தின் பின்வரும் துறைகளுக்கு, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அச்சு இயந்திர இயக்குநர்கள்
2. அச்சுக் கோப்பாளர்கள்

தகைமை: ஆகக் குறைந்தது ஜி.சி.ஈ. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தி

3. தட்டச்சாளர் / எழுதுவினைஞர்கள்

தகைமை: மிகக் குறைந்தது ஜி. சி. ஈ. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியுடன் ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி.

தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்களுக்கு தொழிற்பயிற்சியின் போது அலவன்ஸும், பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 31 - 12 - 1991

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

செயலாளர்,
யாழ். மாவட்ட றோட்டரிக் கழகம்,
15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்ப உறையின் இடதுபக்க மேல் மூலையில் "யாழ். றோட்டரிக் கழகத்தின் தொழிற் பயிற்சித் திட்டம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

செயலாளர்,
யாழ். றோட்டரிக் கழகம்.

(இ-1036)


இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 393/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-12-1991 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org